**தலைப்பு 313 – மத்திய மாகாண சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

## 1. தூரநோக்கு, செயற்பணி மற்றும் பிரதான செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

மத்திய மாகாணத்தின் அபிமானமிக்க மக்களுக்கு சுபீட்சமான வாழ்க்கையை பெற்றுக்கொடுக்கும் இலக்கை எய்துவதற்கு 2016 ஆம் ஆண்டளவில் இலங்கையின் மிகச் சிறந்த மாகாண சபையாக பரிணமிக்கச் செய்தல்.

### 1.2 செயற்பணி

மத்திய மாகாணத்தில் வாழும் அனைத்து மக்களிற்கும் உரித்தான கலாசார, சமூக, பொருளாதார நிலமைகள், சுற்றாடல் மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் மீது விசேட கவனம் செலுத்தி மனித மற்றும் பௌதீக வளங்களை செயற்திறனுடனும் பயனுறுதியாகவும் ஈடுபடுத்துவதன் மூலம் மத்திய மாகாண மக்களிற்கு நிலைபேறான, கௌரவமான, உயர் வாழ்க்கைத் தரத்தினை ஏற்படுத்துதல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபையின் அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கடமைகளையும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுதல்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடுகளும் செலவினமும்**

மத்திய மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 28,005,885,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை இதில் ரூபா 21,997,847,967 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 6,008,037,033 தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 21 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 22,961,925,000 | 17,916,925,000 | 5,045,000,000 | 22 |
| மூலதனம் | 5,043,960,000 | 4,080,922,967 | 963,037,033 | 19 |
| மொத்தம் | 28,005,885,000 | 21,997,847,967 | 6,008,037,033 | 21 |

மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபை நிதியத்தின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.